கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர் : திரு. த.அன்பழகன், இ.ஆ.ப.,

ந.க.எண். 2383/2013/பேரூ2

நாள்: .10.2020

பொருள் — பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – திண்டுக்கல் மண்டலம் – கரூர் மாவட்டம் – தமிழ்நாடு காகித ஆலை புகளூர் பேரூராட்சி– இளநிலை உதவியாளர் திருமதி.பெ.சுதா – என்பவர் 25.08.2014 ஆம் நாள் முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தது – இளநிலை உதவியாளர் பணிநிலையில் ஓராண்டு பணி பூர்த்தி செய்தது – பணிவரன்முறைப்படுத்தி – ஆணையிடுதல்.

பார்வை:–
1) கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 2383/2013/பேரூ2, நாள்: 23.08.2014
2)சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரது கடிதம் ந.க.எண். 7131/2018/அ9 நாள். 03.01.2020.
3)அரசுக்கடிதம் ந.க.எண்.16539பேரூ1/2018–1 நாள். 18.12.2019.
4)அரசாணை (நிலை) எண். 80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள். 02.03.2016
5)தொடர்புடைய ஆவணங்கள்.

------

**ஆணை:**

திண்டுக்கல் மண்டலம், கரூர் மாவட்டம், புஞ்சைத்தோட்டக்குறிச்சி பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து 15.11.2012ல் பணியிடையே காலமான திரு.ப.இளங்கோவன் என்பவரது வாரிசாரரும் மனைவியுமான திருமதி.பெ.சுதா என்பவருக்கு கருணை அடிப்படையில் பார்வையில் 1 இல் காணும் செயல்முறைகளில் தமிழ்நாடுகாகிதஆலை புகளூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 25.08.2014 முற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார்.

2)அதன் தொடர்ச்சியாக சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது பார்வை 2 இல் காணும் கடிதத்தில் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை வரன்முறை செய்ய ஏதுவாக பார்வை 3 இல் காணும் அரசு கடிதத்தில், அரசாணை (நிலை) எண் 80 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை நாள் 02.03.2016 இல் பத்தி 6.2 இன்படி ஆய்வு செய்து மேல்நடவடிக்கை எடுக்குமாறும், மேற்படி அரசாணையில் தெரிவித்தவாறு நியமன அலுவலரால் தனியரின் பணியினை வரன்முறைப்படுத்திய பிறகு உரிய முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பிவைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3)அதன்படி, கரூர் மாவட்டம், தமிழ்நாடு காகித ஆலை புகளூர் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திருமதி. பெ.சுதா என்பவரது பணியினை பணியில் சேர்ந்த நாளான கலம் 5 இல் காணும் நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர் பெயர் / பணியின் நிலை | பணிபுரியும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | பணியினை வரன்முறைப்படுத்திய நாள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.பெ.சுதா,<br>இளநிலை உதவியாளர் | தமிழ்நாடு காகித ஆலை புகளூர் | 25.08.2014 மு.ப | 25.08.2014 மு.ப |

4)தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகளை மேற்கொள்ளவும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கான சான்றினை சமர்ப்பிக்கவும் தமிழ்நாடு காகித ஆலை பேரூராட்சி செயல்அலுவலர் பணிக்கப்படுகிறார்.

23.10.20

மாவட்ட ஆட்சித்தலைவர்
கரூர் மாவட்டம்.

**பெறுநர் :**
திருமதி.பொ.சுதா, இநிலை உதவியாளர்,
தமிழ்நாடு காகித ஆலை புகளூர் பேரூராட்சி, கரூர் மாவட்டம்.

**நகல்:**
1) செயல்அலுவலர், தமிழ்நாடு காகித ஆலை புகளூர், கரூர் மாவட்டம்.
2) பேரூராட்சிகளின் இயக்குநர் , பேரூராட்சிகளின் இயக்குநரகம், குறளகம், சென்னை–108.